# LAABH SAMACHAR

Volume: 11 | Issue : 09 | DECEMBER 2022 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE








அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO



# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343

---

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

---



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

## A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

---

உங்கள் உடல்
எடையை பராமரிக்க
குறைக்க / அதிகரிக்க
விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

L.N.R. தாமோதரன் - 98431 71477



# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

**நமஸ்கார்...**

– T.R.மோகன்ராம்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தொடர்ந்து வெகு சுறுசுறுப்புடன் இயங்கி வருவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. கடந்த ஒரு மாதத்தில், ஜி.எஸ்.டி வரி மற்றும் மாநகராட்சி சொத்து வரி குறைகளை நீக்க வலியுறுத்தி கோரிக்கை மனுக்களை அனுப்பியும், தொழில் முனைவோர்களின் நலனுக்காக, தொழில் வளர்ச்சிக்காக தொடர்ந்து அமைச்சர்கள், அதிகாரிகளை சந்தித்தும் வருகிறது.

மேலும், அங்கத்தினர்களின் தொழில் நலன் மற்றும் பொது மக்களின் நலன் கருதி தொழில் அபிவிருத்தி முகாம், வேலை வாய்ப்பு முகாம் மற்றும் மருத்துவ முகாம் என முப்பெரும் முகாம்களை புறநகர் பகுதிவாழ் மக்களின் நலனுக்காக சென்ற மாதம் நடத்தப்பட்டது. இது, நம் சேம்பர் அங்கத்தினர்களுக்கு மட்டுமல்லாது, புறநகர் பகுதிவாழ் மக்கள் மிகவும் பயனடைந்துள்ளனர். புறநகர் பகுதியில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் பெருமை ஓங்கியுள்ளது. இந்த புதிய முயற்சியை அங்கத்தினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் புறநகர் பகுதிகளில் இது போன்ற நிகழ்வுகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடத்த வேண்டும் என்று தாமாக முன்வந்து என்னிடமும், நிர்வாகஸ்தர்களிடமும் கேட்டுக்கொண்டது, அவர்களின் ஆர்வமும், தேவையும் உணர முடிந்தது. அதோடு, மூன்று முகாம்களாக இல்லாமல் ஒரே முகாமாகவும் நடத்த வேண்டும் எனவும் தங்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இது குறித்து செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாதமும், நமத ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் செயற்குழு கூட்டம் நடைபெறும் என்று புதிய நிர்வாகத்தின் துவக்கத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்பயனாக, தொடர்ந்து புதிய முயற்சிகளும், தொழில்முனைவோர் நலனுக்கு சீர்திருத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறு சுறுசுறுப்புடன் இயங்கும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் நிர்வாக செயல்பாடுகளை அங்கத்தினர்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் மிகவும் பெருமைகொள்கிறேன்.


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |
| **EC Members** | **Chairmanship** | **Contact** |
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. குபேந்திரன்

**13.11.2022** – நிலையூர் கைத்தறிநகரில், தொழில் அபிவிருத்தி முகாம், வேலை வாய்ப்பு முகாம் மற்றும் மருத்துவ முகாம் முப்பெரும் முகாம் சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. மக்கள் தொடர்பு சேர்மன் திரு. T.N. சூரியபிரகாஷ் அவர்கள் விழாவை ஏற்பாடு செய்தார்.

**15.11.2022** – 2வது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**16.11.2022** – திருமலை திருப்பதி தேவஸ்தான வேதிக் பல்கலையில் நம் சமூகத்தைச் சேர்ந்த ஸ்ரீ. T.G. கிஷன் குமார் அவர்கள், பாஞ்சராத்ர ஆகம ஆராய்ச்சிக்கு முனைவர் பட்டம் பெற்றதுடன், மேற்படி பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்ததற்கு சேம்பர் குழுவினர் நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

**23.11.2022** – ஜி.எஸ்.டி. வரி குறைதீர் கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை ஜி.எஸ்.டி. ஆணையர் திரு. ஆரோக்யராஜ் அவர்களிடம் அளித்தனர்.

**25.11.2022** – சேம்பர் உறுப்பினர் திரு. R.B. சரவணன், வேதவல்லி ஹாலிடேஸ் உரிமையாளர் அவர்களின் கிளை திறப்பு விழாவிற்கு சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்து சிறப்பித்தனர்.

**29.11.2022** – மாண்புமிகு தமிழக தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களை நமது சேம்பர் குழுவினர் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

**07.12.2022** – டிசம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம், **Challenges in HR Management** என்ற தலைப்பில் நடைபெற்றது. சிறப்பு பேச்சாளராக Dr. R. பிரின்ஸ் Asst. Prof. HR Faculty, Thiagarajar School of Management, Mdu. அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். நிகழ்ச்சிகுழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர், லாப் ஸமாச்சார் நவம்பர் மாத இதழ், தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, சிந்தாமணி கிளை மேலாளர் திரு. கண்ணன் அவர்களால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில், இதழ்குழு சேர்மனாகிய என்னுடன், இணைச் செயலாளர் திரு.V.V. ராம்லக்ஷ்மண், சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள், திரு.T.N. சூரியபிரகாஷ் (மக்கள் தொடர்பு) & திரு.S.G. ஸ்ரீநிவாசன் (வாழ்த்துகுழு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ல் மிகப் பெரிய நிகழ்வாக மூன்று வகையான முகாம்களை கடந்த நவம்பர் மாதம், நிலையூர், கைத்தறி நகரில் நடத்தியது. தொழில் அபிவிருத்தி முகாம், வேலை வாய்ப்பு முகாம் மற்றும் மருத்துவ முகாம் என நடைபெற்ற இந்த முப்பெரும் முகாம் குறித்த தகவல்களை இந்த மாத இதழில் புகைப்படங்களுடன் பிரசுரித்துள்ளோம்.

அதோடு, ஒவ்வொரு மாதமும் சாதனையாளர்களை சந்தித்து பேட்டி காணும் நமது இதழ் குழுவினர், இந்த முறை, சமீபத்தில் கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற நமது சேம்பர் முன்னாள் தலைவர் திரு.K.K.G. பிரபாகரன் அவர்களை பேட்டி கண்டுள்ளது. நமது சேம்பர் நிர்வாகிகளுக்குள் என்பதைக் கடந்து அவரின் சாதனைக்கு கிடைத்த டாக்டர் பட்டத்திற்காக என்கிற பார்வையில் இந்த சிறப்புப் பேட்டியை இந்த மாத இதழில் பிரசுரித்துள்ளது.

அங்கத்தினர்கள் இந்த மாத இதழை படித்து, தங்கள் கருத்துக்களை **94438 31496** எண்ணிற்கு வாட்ஸ்ஆப் செய்ய கேட்டுக்கொள்கிறேன்.






# INDUS FINANCE LTD

A RBI Registered BSE listed NBFC

Head Office - Kothari Buildings, 4th Floor, No. 114 M G Road, Nungambakkam, Chennai - 600 034. T : 044 - 28331310
E : contact@indusfinance.in W : www.indusfinance.in

Contact us for
All Your Financial needs*

**Property Loans**
**MSME Loans**
**Education Loans**
**Business Loans**
**Vehicle Loans**
**Life Insurance Policy Loans**
**Rental Discounting**

For More Details contact
**Mr.Kannappan V**
M : 94440 51147

*Conditions apply

# முப்பெரும் முகாம்

நமது சேம்பர், புறநகர் பகுதி வாழ் மக்களை ஒருங்கிணைக்கும் வகையில், தொழில் முனைவோர்களுக்காக, தொழில் அபிவிருத்தி முகாம், வேலை தேடுவோருக்கு வேலை வாய்ப்பு முகாம் மற்றும் பொதுமக்களுக்காக மருத்துவ முகாம் என மூன்று வகையான முகாம்களை **முப்பெரும் முகாம்** என்ற தலைப்பில், கடந்த 13.11.2022 – ஞாயிறு அன்று நிலையூர், கைத்தறி நகர் பகுதியில் உள்ள N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளியில் சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமையில் நடத்தியது.

இந்த முப்பெரும் முகாமில், காலை 9 மணிக்கு **மருத்துவ முகாம்** துவங்கியது. சித்தா & ஆயுர்வேதா, ஹோமியோ மற்றும் அலோபதி ஆகிய மருத்துவ சேவைகள் பொது மக்கள் வசதிக்காக வழங்கப்பட்டன. பகல் 1 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்றனர். கைத்தறி நகர் மக்கள் குரல் நல சங்கத் தலைவர் திரு. V.R. கார்த்திக் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற மருத்துவ முகாம் துவக்க நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக, திரு. K.R. ஸ்ரீதர், JMD, Quality Knit Wears Pvt. Ltd. அவர்கள் கலந்து கொண்டார். இருவரையும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசு வழங்கியும் கௌரவித்தது. ஓம் மீனாட்சி பல் கிளினிக், வேல் மருத்துவமனை & வேல் சிறப்பு ஆர்தோ கிளினிக், ரங்கராஜன் வைத்திய சாலை, தனலட்சுமி ஹோமியோ கிளினிக் மற்றும் சிவா பல் மருத்துவமனை ஆகியோர் பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கினார்கள்.

காலை 10 மணிக்கு, **வேலை வாய்ப்பு முகாம்** துவங்கியது. கைத்தறிநகர் SSS அறக்கட்டளை தலைவர் திரு. M.P.T. கோபிநாத் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்த துவக்க விழாவில், N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளி கவுன்சில் செயலாளர் திரு. T.L. ஹரி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், நிலையூர் ஊராட்சி பிட்–1, முன்னாள் துணைத் தலைவர் திரு. K.R. சாமிராவ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இருவரையும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசு வழங்கியும் கௌரவித்தது. பகல் 1 மணி வரை நடைபெற்ற இந்த வேலை வாய்ப்பு முகாமில், 50க்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்புக்காக அணுகினர். 17க்கும் மேற்பட்ட, நம் சேம்பர்–ல் உள்ள தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் பணிக்குத் தேவையான, தகுதியான பணியாட்களை தேர்வு செய்தனர்.

காலை 11 மணிக்கு, தொழில் முனைவோருக்காக, தொழில் **அபிவிருத்தி முகாம்** துவங்கியது. கைத்தறி நகர் ஐக்கிய சங்கத் தலைவர் திரு. M.H. லட்சுமணன் அவர்களின் முன்னிலையில் துவங்கிய இந்த கூட்டத்திற்கு திரு. E.R. குமரேசன், EAV Groups of Company அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், திரு. T.K.D.மோகன், TKD Enterprise Pvt. Ltd. அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். நமது தொழிலை விரிவுபடுத்த அரசாங்கம் அளிக்கும் சலுகைகள் மற்றும் பயன்களைப் பற்றிப் பேச, சிறப்புப் பேச்சாளராக, டேன்சிட்கோ, குறு,சிறு தொழில் வளர்ச்சி மைய கிளை அலுவலக உதவி இயக்குனர் திரு. P. ஜெயசெல்வம் அவர்கள் கலந்து கொண்டார். இந்த கூட்டத்திற்கு அப்பகுதியில் தொழில் செய்து வரும் சிறிய தொழில் முனைவோர்கள் பலர் கலந்துகொண்டு பயனடைந்தனர். மேற்படி நிகழ்ச்சிகளை சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டிற்கு உதவிய, N.K.குப்பய்யன ரத்னாமணி பள்ளி, கைத்தறி நகர் ஐக்கிய சங்கம், கைத்தறி நகர் மக்கள் குரல் மற்றும் கைத்தறி நகர் SSS அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கௌரவித்தது. அவர்களுக்கு இதழின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த முப்பெரும் முகாமை சேம்பர், மக்கள் தொடர்பு சேர்மன் திரு. T.N. சூரியபிரகாஷ் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். இணைச் செயலாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண் அவர்கள் உடன் செயல்பட்டார்.


**Sowndarya Traders**

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

VEDHAVALLI
HOLIDAYS

# வேதவல்லி ஹாலிடேஸ்

20 வருட அனுபவம் - Since 2002 in Travel Industry

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

## TOUR PACKAGES
Domestic / International



IndiGo | Air India | SpiceJet | Emirates | Lufthansa

## FLIGHT TICKETS
Domestic / International

## VISA - TOURIST VISA




## CAR - RENTAL
## BUS - TICKETS



BOOK NOW

www.vedhavalliholidays.com

**99430 31237, 98430 77518**

VEDHAVALLI
HOLIDAYS

## வேதவல்லி ஹாலிடேஸ்

82, காமராஜர் சாலை,
அலங்கார் தியேட்டர் எதிரில், மதுரை



# முப்பெரும் முகாமில், முக்கியஸ்தர்களின் உரை

விழாவில், திரு. **K.R. ஸ்ரீதர்** JMD., Quality Knit Wears Pvt. Ltd. அவர்கள், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உடன் N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளி இணைந்த இந்த முப்பெரும் விழா நடத்துவது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மேலும், இது போன்ற செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்தி, புதிய தொழில் முனைவோர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உருவாக்க வேண்டும் என்று தமது கருத்தை தெரிவித்தார்.



நிலையூர் ஊராட்சி பிட்-1, முன்னாள் துணைத் தலைவர் திரு. K.R. **சாமிராவ்** அவர்கள் பேசியதாவது, இது போன்ற நிகழ்ச்சியை புறநகர் பகுதியில், குறிப்பாக நிலையூர், கைத்தறிநகரில் வசிக்கும் நமது சமூக மக்களின் நலனுக்காக ஸௌராஷ்ட்ர சேம்பர் நடத்துவது பெரும் மகிழ்ச்சி. அமைப்புகள் தான் மக்களுக்கு வழிகாட்டி. நிலையூரில், போக்குவரத்து வசதி, குடிநீர் சாலை வசதி போன்றவை சமூக அமைப்பின் முயற்சியில் கிடைத்துள்ளது. அமைப்புகள், மக்களை ஒருங்கிணைக்கிறதுச் செல்கிறது எனத் தெரிவித்தார்.



N.K.ரத்னாமணி குப்பய்யன் பள்ளி செயலாளர் திரு. T.L. **ஹரி** அவர்கள், டெக்ஸ்டைல் துறையிலிருந்து பல்வேறு துறைகளில் சாதிக்க வைத்தது, நம் முன்னோர்கள் உருவாக்கிய கல்வி நிறுவனங்களால் தான். அதுபோல, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பு சமூகத்தில் புதிய தொழில் & வேலை வாய்ப்புகளை உருவாக்கும் இந்த முயற்சிக்கு பாராட்டுக்கள். நம் சமூக மக்கள், தன் குடும்பம் என்பதோடு நின்று விடாமல், சமூகத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சமூக அமைப்புகளுக்கு கட்டுப்பட்டும், சமூக நடவடிக்கைகளில் ஈடுபடவும் வேண்டும். உதவி கோரி வருபவர்களை அமைப்புகள், ஆதரவு கரம் அளிக்கவும், வழிகாட்டியாக செயல்படவும் வேண்டும். இதுவே சமூகத்தில் ஆரோக்கிய சூழலை உருவாக்கும் எனக் கூறினார்.



கைத்தறி நகர் மக்கள் குரல் தலைவர் திரு. V.R. **கார்த்திக்** அவர்கள், ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் இந்த முயற்சிக்கு இப்பகுதி வாழ் மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக வேலை வாய்ப்பு முகாம் நடத்துவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. மக்களுக்கு வழிகாட்டி அமைப்பு தான். மக்களின் பொதுப் பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பதும் அமைப்புதான். இப்பகுதியில் பல அமைப்புகள் இருந்தாலும், ஒற்றுமையுடனே செயல்பட்டு மக்களை வழிநடத்தி வருகிறோம். அமைப்புக்குள் யாரும் யாரோடும் பொறாமை கொள்ளாமல் செயல்பட்டு வருவதே இப்பகுதி அமைப்புகளின் சிறப்பு. கைத்தறிநகர் பகுதி மக்களை அரண் போல பாதுகாத்து பல்வேறு நற்பணிகளை செய்து வருகிறோம். தற்போது இந்த முப்பெரும் முகாம், கைத்தறிநகர் மக்கள் குரல் அமைப்பு ஸௌ. சேம்பர்-உடன் இணைந்து நடத்துவது பெரும் மகிழ்ச்சி.



SSS அறக்கட்டளையின் தலைவர் திரு. M.P.T. **கோபிநாத்** அவர்கள் பேசுகையில், இந்த முப்பெரும் முகாமில், வேலை வாய்ப்பு முகாம் மற்றும் தொழில் அபிவிருத்தி முகாம் இந்தப் பகுதியில் முதன் முறையாக நடைபெறுகிறது. கைத்தறி நகரில், SSS அறக்கட்டளை, பல்வேறு சேவைகள் குறிப்பாக பொதுமக்கள் நலனுக்காக செய்து வரும் இந்த வேளையில். பொது மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித்தரும் பணியிலும் நமது SSS அறக்கட்டளை அமைப்பு, ஸௌராஷ்ட்ர சேம்பர் அமைப்புடன் இணைந்து நடத்துவது பெருமையாக உள்ளது என்றார்.



ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் முன்னாள் தலைவர் திரு. E.R. **குமரேசன்** அவர்கள் பேசுகையில், நம் சமூகத்தில் தொழில் வளர்ச்சி காண வேண்டும் என்ற நோக்கில் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உருவாக்கப்பட்டது. சமூக நலனுக்காக செய்யும் பணியை மேலும் விரிவுபடுத்த வேண்டியே, புறநகர் பகுதியிலும் நடத்தி வருகிறோம். இங்குள்ள அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் தரும் ஆதரவு, நமது சேம்பருக்கு மேலும் உற்சாகத்தை அளிக்கிறது. இது போன்ற சமூக நிகழ்வுகளை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றார்.



# முப்பெரும் காம்




தொழில் அபிவிருத்தி முகாமின் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்ட திரு. P. ஜெயசெல்வம் அவர்கள், குறு,சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அரசு அளிக்கும் சலுகைகள் மற்றும் மானியங்கள் குறித்த விபரங்களை விளக்கிப் பேசினார்.

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கம், நீட்ஸ், UYEGP போன்ற திட்டங்களில் உள்ள சலுகைகள், திட்டங்களில் கிடைக்கும் மானியம், மானியத்தை எவ்வாறு கணக்கிடுவது, பெற்ற கடன் திரும்ப செலுத்த அளிக்கும் கால அவகாசம், தொழிலில் நஷ்டம் எனில், பெற்ற கடனை, அரசு எவ்வளவு சதவீதம் தள்ளுபடி செய்கிறது. அரசின் பொது கொள்முதலினால் கிடைக்கும் பயன்கள், விற்பனையை அது எவ்வாறு ஊக்குவிக்கிறது, ஏற்றுமதியாளர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள், க்ளஸ்டர் துவங்குபவர்களுக்கு கிடைக்கின்ற சலுகைகள் என பல்வேறு தகவல்களோடு. உத்யோக் பதிவு மற்றும் ZED சான்றிதழ் அவசியம் குறித்தும் மிகத் தெளிவாக விளக்கினார். தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்கிற நோக்கில் கலந்துகொண்ட தொழில்முனைவோர்களுக்கு இந்த கூட்டம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

சிறப்பு விருந்தினர் திரு. P. ஜெயசெல்வம் அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது.

(குறிப்பு: உத்யம் பதிவை உற்பத்தி மற்றும் சேவைத் துறையினர்கள் மட்டுமே பெற வேண்டும் என்றில்லை. டிரேடிங் துறையினர்களும் எடுக்கலாம். நம் சமூகத்தில் பலர் டிரேடிங்-ல் உள்ளனர். அவர்கள், சேவை என்கிற அடிப்படையில் இந்த பதிவை பெறலாம்).

## Loan Scheme

| Loan Scheme | PMEGP | NEEDS | UYEGP |
|---|---|---|---|
| Age | 18 Years Completed | Mini. 21 Years<br>Max : 35 for OC & 45 for others | Mini. 18 Years<br>Max : 35 for OC & 45 for others |
| Edu. Qualifications | Mfg. – Upto 5 L - Nil & above 10 L – 8th STD Pass.<br>Service – upto- 5L Nil & above 5 L 8th STD Pass | HSC/ITI/Diploma/ Degree | 8th STD Pass |
| Mini. & Max Loan Amount | Mfg : 50 L<br>Service : 20 L | Mini : 10 L<br>Max : 500 L | Mfg : 15 L<br>Service : 5 L<br>Trading : 5 L |
| Own Contribution | 10% for OC &<br>5 % for Others | 10% for OC &<br>5 % for Others | 10% for OC &<br>5 % for Others |
| Subsidy | Urban : 15% for OC & 25 % for Others.<br>Rural : 25% for OC & 35 % for Others. | 25 % on TPC excluding Working Capital. (Max.30 .00L) | 25% of TPC |
| Partnership | Not Allowed | Allowed | Not Allowed |

| | | | |
|---|---|---|---|
| Age | 18 Years Completed | Mini. 21 Years<br>Max : 35 for OC & 45 for others | Mini. 18 Years<br>Max : 35 for OC & 45 for others |
| Edu. Qualifications | Mfg. – Upto 5 L - Nil & above 10 L – 8th STD Pass.<br>Service – upto- 5L Nil & above 5 L 8th STD Pass | HSC/ITI/Diploma/ Degree | 8th STD Pass |
| Mini. & Max Loan Amount | Mfg : 50 L<br>Service : 20 L | Mini : 10 L<br>Max : 500 L | Mfg : 15 L<br>Service : 5 L<br>Trading : 5 L |
| Own Contribution | 10% for OC &<br>5 % for Others | 10% for OC &<br>5 % for Others | 10% for OC &<br>5 % for Others |
| Subsidy | Urban : 15% for OC & 25 % for Others.<br>Rural : 25% for OC & 35 % for Others. | 25 % on TPC excluding Working Capital. (Max.30 .00L) | 25% of TPC |
| Partnership | Not Allowed | Allowed | Not Allowed |

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை-1. CELL: 92445 00633 | 99433 79499
EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

# முப்பெரும் முகாம்




முப்பெரும் முகாம் துவக்க விழாவில் ஸௌராஷ்ட்ர சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்களின் உரை

## தொழில் அபிவிருத்தி முகாம்







## தொழில் வாய்ப்பு முகாம்








## மருத்துவ முகாம்









பூஜையுடன் துவங்கிய விழா











விழா களப்பணி



ஸௌ. கூட்டுறவு வங்கி பங்களிப்பு

# முப்பெரும் முகாம்





நிகழ்ச்சிக்கு உதவிய N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளி, ஐக்கிய சங்கம், மக்கள் குரல் மற்றும் SSS அறக்கட்டளை நிர்வாகிகளுடன் ஸௌ. சேம்பர் நிர்வாகஸ்தர்கள் கூட்டு புகைப்படம்

## சாதனையாளர்கள் சந்திப்பு பகுதி...

# இருபதில் தொடங்கி எழுபதை கடந்தும் ஆக்கப்பூர்வ செயல்களும், தொழில் வளர்ச்சியும்



அன்மையில் கௌரவ டாக்டர் பட்டம் பெற்றவரும், திருச்சி National Institute of Technology கல்லூரியில் பொறியியலில் தங்கப்பதக்கம் பெற்ற பட்டதாரியும், குட்டுவா சிலிகேட்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருமான **திரு. K.K. ஞான பிரபாகரன்** அவர்களைத்தான், இந்த மாத இதழின், சாதனையாளர் சந்திப்பு பகுதியில் காண இருக்கிறோம்.

இவரது பெற்றோர், திரு. கே.வி. கிருஷ்ணய்யர் – மகாலட்சுமி ஆவர். மதுரையை பூர்வீகமாக கொண்டவர். குட்டுவா என்பது இவரது வீட்டுப் பெயர்.

**கன்னி முயற்சி:** கல்லூரி பயிலும் காலத்திலேயே சுய தொழில் செய்ய வேண்டும் என்ற வேட்கையுடன், TANSI DIE CASTING என்ற நிறுவனத்தில் மூன்று மாத தொழிற் பயிற்சி பெற்று, தமது 22வது வயதில், சக பட்டாரிகளை இணைத்துக்கொண்டு ஆட்டோ மொபைல் தொழிலுக்கு தேவையயான பிரஷர் டை காஸ்டிங் பொருட்களை உற்பத்தி செய்யும் சொசைட்டி ஒன்றை நிறுவி அதன் இயக்குனராக இருந்தார். இவரது கன்னி முயற்சி தோல்வியடைந்து.

**மாற்று வழி:** பிறகு, மூத்த சகோதரர் திரு. கே.கே. சுரேந்திரநாத் அவர்கள் தோற்றுவித்த வாருணி கிளீன்சர்ஸ் (பின்னால் வாருணி கெமிக்கல்ஸ் நிறுவனம்) குடும்ப நிறுவனத்தில் ஒரு ஊழியராக பணியில் சேர்ந்தார். இந்நிறுவனம், சிறிய முதலீட்டில் டிடர்ஜெண்ட் உற்பத்திக்கு தேவையான ஆசிட் சிலரி (LABSA) மற்றும் சோப்பு ஆயில் உற்பத்தி செய்தது. இதற்கான சந்தை அளவு மதுரையில் குறைவு என்றாலும், இவரின், தொழில் செய்ய வேண்டும் என்கிற அதிகப்படியான ஆர்வம் மற்றும் ஈடுபாடு காரணமாக அதிக அளவில் அதிகரித்தது. அந்த சமயத்தில், வாஷிங் சோப் பயன்பாட்டிற்கு முக்கியமான பொருளாக இருந்த எண்ணெய் வகைகளை, மனிதனுக்கு தேவையான முக்கியமானவை என்று கூறி அப்போதிருந்த அரசு தடை விதித்தது. இதற்கு மாற்றுப்பொருளாக பெட்ரோலியம் பொருளை அடிப்படையாகக் கொண்ட LABSA, ஆசிட் சிலரி உற்பத்தியை அரசு ஊக்குவித்தது. ஒரு நிறுவனம் வளர அரசின் வழிமுறையிலேயே செல்ல வேண்டும் என்கிற இவரது கோட்பாட்டின்படி, இவரது முயற்சியில், இந்நிறுவனமும், LABSA உற்பத்தியை மதுரையில் தொடங்கியது.

**நிறுவன வளர்ச்சிக்கு புதிய முயற்சி:** 1975–80களில், மின்சாரத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சோப்பு தயாரிப்புக்கு அரசு வரி விதித்தது. அச்சமயம், சிறிய அளவில் இயங்கிக் கொண்டிருந்த சிறுதொழில் (வீனஸ், பொன்வண்டு, ஊர்வசி, அரசன் போன்ற) நிறுவனங்களை இவர், கையினால் இயக்கும் இயந்திரங்களை சோதனை அடிப்படையில் மேற்படி சிறுதொழில் சோப் உற்பத்தியாளர்களுக்கு அறிமுகப்படுத்திய சிறிது காலத்தில் அந்நிறுவனங்கள் அசுர வளர்ச்சி பெற, தமது குடும்ப நிறுவனமும் வளர்ந்தது, இன்றுவரையில் மேற்படி நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்கள் தான் என்று தமது ஆக்கப்பூர்வ செயல்களை பெருமையுடன் தெரிவித்தார்.

**உற்பத்தியில் புதுமை:** 'சோடியம் சிலிக்கேட்' தயாரிக்க 'பர்னஸ் ஆயில்' தேவை, அதன் விலை 1990களில் உச்சத்தை தொட, இதற்கு மாற்று வழியை தேடினேன். அரிசி உமி எரித்தால் அதில் சிலிக்கா கிடைக்கும். அந்த சிலிக்காவுடன், காஸ்டிக் சோடாவை சேர்த்தால் சாதாரண வெப்ப நிலையில் சோடியம் சிலிகேட் உற்பத்தி ஆகிவிடும் என்ற தகவலை சென்னையில் உள்ள IIT நிறுவன பேராசிரியர் ஒருவர் மூலம் அறிந்து கொண்டேன். இதனை முயற்சி செய்ததில் தோல்வியடைந்தேன் என்றாலும், இந்த ஐடியாவில் சற்று மாறுதலாக, தனது சகோதரர்களுடன் சிலிக்கா மணலுக்குப் பதிலாக குவார்ட்ஸ் பவுடருடன் காஸ்டிக் சோடாவை சேர்த்து சூடாக்கி ஒரு குறிப்பிட்ட பிரஷர் வைத்து ரியாக்ஷனை தொடர்ந்தால் சோடியம் சிலிகேட் உற்பத்தி ஆகிவிடும் என்று கண்டுபிடித்தோம். இதனை காப்புரிமை பெறத் தவறிவிட்டோம் என்று தனது வருத்தத்தைத் தெரிவித்தார். அதற்குள் பல்வேறு நிறுவனங்கள் பர்னஸ் ஆயில் இல்லாமல் சோடியம் சிலிகேட் உற்பத்தியை தமிழ்நாட்டில்




சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223



தொடங்கினார்கள். ஆனால், என்னுடைய புதிய முறை உற்பத்தியில் பெட்ரோலிய எரிபொருள் உபயோகம் முற்றிலுமாக இல்லாமல் நீக்கியதால் நம் அந்நிய செலவாணி சேமிக்கும் பங்கில் என்னுடைய முயற்சி உள்ளது என்றும் அதற்கு தான் ஒரு கிரியா ஊக்கி (கேட்டலிஸ்ட்) ஆக பணி புரிந்ததற்காக மத்திய அரசின் பாராட்டுச் சான்றிதழ் உள்ளதாக பெருமையுடன் தெரிவித்தார்.

**தயாரிப்பில் புதுமை:**
இதனையடுத்து, 2001ல், INNOPAC என்ற இங்கிலாந்து நிறுவனத்தில் தொடங்கி பின் இத்தாலியின் நிர்வாகத்தில் ஒரு ஏஜென்சி எடுத்து இந்தியாவில் முதல்முறையாக தண்ணீரில் கரையக்கூடிய பிளாஸ்டிக் ஃபிலிம் டெக்னாலஜியை புகுத்த முயற்சியை எடுத்ததாகக் கூறினார். ஆரம்பத்தில், டிடெர்ஜெண்ட் பவுடரை தண்ணீரில் கரையக்கூடிய பிளாஸ்டிக் ஃபிலிமில் (PVOH FILM) பேக்கிங் செய்வது என் எண்ணத்தில் தொடங்கப்பட்டதாகவும், பின் பூச்சி மருந்துகளை இந்தியாவில் பேக்கிங் செய்யும் அந்த முயற்சியில் இறங்கி வெற்றி பெற்றதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். இந்திய நிறுவனங்கள், PVOH பிலிம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் விற்பனை செய்ய தொடங்கியவுடன் தான் இந்த புரட்சியிலிருந்து விலகிவிட்டதாகத் தெரிவித்தார். எனினும், இந்த புதுமையான PVOH பிலிம் புகுத்தலுக்கு தாம் தான் காரணம் என்பதில் பெருமைகொள்வதாகத் தெரிவித்தார்.

**புதிய கண்டுபிடிப்பு:** பொதுவாக, சோடியம் சிலிகேட்டின் உபயோகம், சோப்பு உற்பத்தி, டிடர்ஜெண்ட் உற்பத்தி, பௌண்டரி மோல்டுகளை தயாரிப்பதற்கு பயன்படுகின்றன. இதைத் தாண்டி, சிலிகேட்டின் ஒரு தரத்தை கண்டுபிடித்து ஒட்டும் பசையாக மார்கெட் செய்தேன். இது ஒரு புதிய கண்டுபிடிப்பு. மிக அதிக அளவில் தனது வாடிக்கையாளர்கள் பயனடைந்து உள்ளனர் என்று கூறினார்.

**புதுமையான கோணத்தில் அடுத்த முயற்சி:**
அடுத்ததாக, ஜியோ பாலிமர் டெக்னாலஜி. அதாவது, சிமெண்ட் இல்லாத கான்கிரீட். Fly Ash & SLAG இவ்விரண்டும் சுற்றுச்சூழலை பாதிக்கும் கழிவு பொருட்கள். இதனுடன் இவரது நிறுவனத்தில் தயாரிக்கப்படும் Alkali Activator என்ற பொருளை சேர்த்தால் ஜியோ பாலிமர் கான்கிரீட் உருவாக்க முடியும் என்பது தான். 2010-ல் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து Fly Ash வேஸ்ட் வைத்துக்கொண்டு M35 கிரேட் கான்கிரீட் சாலை அமைத்து 48 மணி நேரத்தில் கமர்சியல் லாரிகள் போவதற்கு ஒரு மாடல் சாலை அமைத்ததில் வெற்றி பெற்றோம். அதோடு, இந்த தொழில்நுட்பத்தை சிமெண்ட் இல்லாமல் ஒரு கட்டிடம் கட்டுவதற்கு எங்களுக்கு மத்திய அரசு உதவியது. சிமெண்ட் கான்கிரீட் செட்டிங் டைம் 21 நாட்கள். ஆனால், ஜியோபாலிமரின் செட்டிங் டைம் 24 மணி நேரம் மட்டுமே என்று கூறி எங்களை வியப்படையச் செய்தார்.

இவ்வாறு தனது அளப்பரிய செயல்களோடு, தேசிய அமைப்புகள் முதல் உள்ளூர் அமைப்புகள் வரை தாம் முக்கிய பொறுப்பில் வகித்து, பல்வேறு தொழில் மற்றும் சமூக சேவைகளை ஆற்றி வருவதையும், குறிப்பாக சமீபத்தில், சிட்கான் மாநாட்டில், ஸௌராஷ்ட்ர சமூக கலாச்சாரத்தைக் காக்க புரோகிதர்கள், அர்ச்சகர்களை இணைத்து தனி மாநாடு நடத்தியதை பெருமையுடன் பகிர்ந்துகொண்டார்.

இவர் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் முன்னாள் தலைவராகவும், லாப் ஸமாச்சார் இதழின் வெளியீட்டாளராகவும் உள்ளார். 2011ல், லாப் ஸமாச்சார் இதழ் ஒரு பிரதிக்கு ரூ. 7/- தபால் செலவு செய்யப்பட்டது. இன்று நாம் மத்திய அரசின் அங்கீகாரத்தையும், அதன் மூலம் தபால் சலுகையையும் பெற்று ஒரு பிரதிக்கு வெரும் 25 பைசா மட்டுமே செலவு செய்து வருகிறோம். இந்த முயற்சிக்கு முக்கிய காரணம் முன்னாள் தலைவரான திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் தான்.



பல்வேறு மாபெரும் முயற்சிகளை பாராட்டி, சமீபத்தில், 16.11.2022 அன்று இவருக்கு, ஆக்ஸ்ஃபா பல்கலைக்கழகம், 'கௌரவ டாக்டர் பட்டம்' வழங்கி கௌரவித்துள்ளது. அவரை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகளைத் தெரிவித்தக்கொள்கிறது.

நிறைவாக, அவர் கூறியதாவது, ஒரு தொழிலில் வெற்ற பெற முதலாவதாக வாடிக்கையாளரின் தேவை ஒரு தொழில் முனைவோர் அறிந்து அதனை பூர்த்தி செய்ய வேண்டும். இரண்டாவதாக, அரசின் கோட்பாடுகளின்படி செல்வதும், அரசு அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனங்கள் தரும் கடன் மற்றும் சலுகைகளை பயன்படுத்திக் கொண்டு முறையாக சென்றால் தொழிலை நீண்ட நாட்களுக்கு நிலைத்து கொண்டுசெல்ல முடியும் என்று கூறி நிறைவு செய்தார்.

மீண்டும் சந்திப்போம்... புதிய சாதனையாளரை தேடி...




தொழிலில் லாபம் என்பதை ஈட்ட மனித வளத்தின் பயன்பாடு என்பது எந்த வகையில் பயனுள்ளதாக இருக்கிறது. இதில் உள்ள சவால் என்ன? அதை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற பல்வேறு சந்தேகங்களுக்கு விடை காண **Challenges in HR Management** என்ற தலைப்பிலான கூட்டம் கடந்த 07.12.2022 அன்று மாலை சரியாக 6.30 மணிக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் அரங்கில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். சிறப்பு அழைப்பாளர் திரு. V.S. விஷ்ணுவர்தன் அவர்கள் உதவியுடன், நிகழ்ச்சிக் குழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். நிறுவனங்களில் தொழிலாளர்களை நிர்வகிப்பதில் உள்ள சவால்கள் பற்றி விவரித்துப் பேச வருகை தந்த சிறப்பு பேச்சாளர் Dr. R. பிரின்ஸ் Asst. Prof. HR Faculty, Thiagarajar School of Management, Mdu. அவர்களை, சிறப்பு அழைப்பாளர் திரு. V.S. விஷ்ணுவர்தன் அவர்கள் சிறப்பு பேச்சாளரை அறிமுகம் செய்தார். திரு. S.S. பிரேம் குமார் அவர்கள் இந்த நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து மிக அழகாக விவரித்தார்.

